**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| CC.No. | : | 105/2020 |
| Deposition of Witness for | : | PW– 5 |
| Name and Age | : | திரு. மாணிக்கம் (வயது 67) |
| Father / Husband Name | : | சின்னான் |
| Occupation | : | கூலி |
| Village | : | சீரண்டபுரம் |
| Taluk | : | தருமபுரி |

**நாள்** – 09.02.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 to A4 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**PW– 5**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது சீரண்டபுரத்தில் குடியிருந்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1–ஐ தெரியும், எதிரிகளை தெரியும். 2019ம் வருடம் தேதி மற்றும் மாதம் நினைவில்லை ஒருநாள் மதியம் சுமார் 12.00 –01.00 மணியளவில் நானும் மாதன் என்பவரும் கூலி வேலைக்கு செல்வதற்காக சென்றபோது பொன்னுசாமி நிலத்தின் அருகே மாரண்டஹள்ளி போலிசார் வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் மகஜர் தயார் செய்தார்கள். பார்வைமகஜரில் நானும், மாதன் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். பார்வைமகஜர் அ.த.சா.ஆ.2–ஆக குறியிடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி** கள் **தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம்மிட்ட தாளில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் போலிசார்

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.02.09 18:21:36 +0530

கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.09 18:21:54 +0530

Judicial Magistrate,
Palacode.